***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 35 |
| NAME | : | இருளப்பன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 01.07.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கசாப் கடையில் வேலை பார்த்து வருகிறேன். எதிரிகள் மாயவன் மற்றும் மாயவநாதன் ஆகியோர்களை எனக்கு தெரியும். அசா.1 கிருஷ்ணன் அசா.2 அந்தோணிராஜ் அசா.3 டேவிட் அமல்ராஜ் அசா.4 செல்வராஜ் . அசா.5 ஜோசப்ராஜ் அசா.6 அருமைகிளி அசா.7 பாலமுருகன் அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி அசா.12 பொன்பாண்டி, அசா.13 சாந்தி அசா.14 குணசீலன், அசா.15 முத்துலெட்சுமி அசா.16 செல்வகுமாரி அசா.17 முருகன், அசா.18 சரோஜா, அசா.19 குமரேசன், அசா.20 மணிராஜ், அசா.21 பொன் சேகர், அசா.22 சுதா, அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி, அசா.26 பவளக்கொடி அசா.27 தெய்வகனி தெரியும். அசா.28 செல்வன் அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் அசா.30 அருள்ஜெலஸ்டீன், அசா.31 அன்னபூரணி, அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ், அசா.33 முத்துக்கனி அசா.34 வசுமதி ஆகியோரை தெரியும்.

எல்லோரும் ஒரே ஊர்க்காரர்கள். 2010 ம் வருடத்திலிருந்து எதிரி மாயவனிடம் சீட்டு போட்டிருந்தேன். 7 குழுக்களாக சீட்டு பிரித்தார். நான் ரூ.60000 சீட்டில் 4 சீட்டுக்கள் போட்டிருந்தேன். நான் மொத்தம் ரூ.38000 கட்டி இருந்தேன். சீட்டு பணத்தை மாயவன் கோவிலில் வைத்து ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு கட்டுவேன். பணத்தை நான் கெட்டும் போது புக்கில் எழுதி வைப்பபார்கள்.

அந்த தாளை எரித்து விட்டார்கள். அதன் பின் சீட்டு பணத்தை நான் கட்ட வில்லை. அவர்கள் ஓடிவிட்டார்கள். 2019 ம் வருடம் வந்தார்கள். எதிரி வாத்தியார் என்பதால் அவரிடம் நான் சீட்டு கட்டினேன்.தற்போது வரை பணம் திரும்ப தரவில்லை. தாளை எரித்து விட்டார்கள். சீட்டும் பிரிக்கவில்லை. ஊர் மககள் அனைவரும் போய் விட்டார்கள் என சொன்னார்கள் நடவடிக்கை எடுக்க கடையம் போலிஸ் ஸ்டேஷன் சென்றிருந்தோம். கிருஷ்ணன் என்பவர் புகார் கொடுத்தார். போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

1 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எப்போது ஊரை விட்டு ஓடினார்கள் என்றால் 2010 ம் ஆண்டு ஊரை விட்டு ஓடினார்கள். எப்போது திரும்பி வந்தார்கள் என்றால் 2019 ல் திரும்பி வந்தார்கள். அசா.1 கிருஷ்ணன் அசா.2 அந்தோணிராஜ் அசா.3 டேவிட் அமல்ராஜ் அசா.4 செல்வராஜ் . அசா.5 ஜோசப்ராஜ் அசா.6 அருமைகிளி அசா.7 பாலமுருகன் அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி அசா.12 பொன்பாண்டி, அசா.13 சாந்தி அசா.14 குணசீலன், அசா.15 முத்துலெட்சுமி அசா.16 செல்வகுமாரி அசா.17 முருகன், அசா.18 சரோஜா, அசா.19 குமரேசன், அசா.20 மணிராஜ், அசா.21 பொன் சேகர், அசா.22 சுதா, அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி, அசா.26 பவளக்கொடி அசா.27 தெய்வகனி தெரியும். அசா.28 செல்வன் அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் அசா.30 அருள்ஜெலஸ்டீன், அசா.31 அன்னபூரணி, அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ், அசா.33 முத்துக்கனி அசா.34 வசுமதி ஆகியோரை எவ்வுளவு நாட்களாக தெரியும் என்றால் நான் சிறு பிள்ளையாக இருக்கும் போதே தெரியும். சீதாலெட்சுமியின் கணவர் பெயர் தெரியாது. ராமலெட்சுமியின் கணவர் பெயர் தெரியாது.முத்துலெட்சுமியின் கணவர் பெயர் தெரியாது. அருமைகிளி கணவர் பெயர் தெரியாது. டேவிட் அமல்ராஜ் தகப்பனார் பெயர் தெரியாது. பாலமுருகன் தகப்பனார் பெயர் தெரியாது. செல்வராணி கணவர் பெயர் தெரியாது. பொன்பாண்டி தகப்பனார் பெயர் தெரியாது. சாந்தி கணவர் பெயர் தெரியாது. செல்வகுமாரி என யாரையும் தெரியுமா என்றால் தெரியாது. சரோஜா என்பவரை தெரியாது, குமரேசன், மணிராஜ் ஆகியோர்களை தெரியாது. பூங்கொடி சூசை ஆணா,

பெண்ணா என்று தெரியுமா என்றால் ஆண், அவர் தகப்பனார் பெயர் தெரியாது. பொற்கொடி என்பவரை தெரியாது. மாயவன் கோவிலை யார் நிர்வாகம் செய்கிறார் என்றால் மாயவன் சார் நிர்வாகம் செய்து வருகிறார். 2010 ல்ஊரைவிட்டு ஓடி 2019 ல் வந்தார்கள் அதுவரை எதிரி எங்கள் ஊரில் இல்லை என்றால் இருந்தார். மகேஷ் மாயவன் என்பவரை தெரியும். அவரும் மாயவன் கோவிலின் வரிதாரர் என்றால் சரிதான். கோவிலை நிர்வாகம் செய்வது சம்பந்தமாக மகேஷ் மாயவனுக்கும் எதிரிக்கும் பிரச்சினை இருந்தது என்றால் சரிதான். மாயவன் கோவிலில் வைத்து நடைபெற்ற சீட்டுக்கள் மாயவன் கோவிலின் நன்மைக்காக 2 வது சீட்டு முழுவதையும் சீட்டு நடத்துபவர்கள் எடுத்து கொள்வார்கள் என்றால் சரிதான்.

கிருஷ்ணன் புகார் கொடுத்தாக சொல்லபட்ட அன்று நான் காவல்நிலையம் சென்றேன். அந்த புகாரை படித்து பார்க்கவில்லை. என்னிடம் படித்து காண்பிக்கவில்லை. அந்த புகாரில் யாரெல்லாம் கையெழுத்து போட்டிருந்தார்கள் என்று தெரியவில்லை. எங்களை கோவிலில் வைத்து போலிஸார் விசாரித்தார்கள். மறுநாள் விசாரித்தார்கள். ஆண் போலிஸ் விசாரித்தார்கள். அவ்வாறு விசாரிக்கும் போது ரூ.60000 சீட்டு 4 சீட்டுக்கள் எத்தனை வாரம் கட்டினேன் என்று பேப்பரில் எழுதி கொடுத்தேன் என்றால் சரிதான். யாரெல்லாம் எத்தனை சீட்டு கட்டிஇருக்கிறார்கள் என்று ஒவ்வொருவரும் தனித்தனி பேப்பரில் போலிஸாரிடம் எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான். அரசு ஊழியராக இருந்து விட்டு கோவிலை நிர்வாகம் செய்யக்கூடாது என்று மகேஷ் மாயவனுக்கும், மாயவனுக்கும் பிரச்சினை என்றால் சரிதான். புகார் கொடுத்த சமயத்தில் மகேஷ் மாயவனும் வந்தார் என்றால் சரிதான். எழுதி வைத்த பேப்பரை எரித்து விட்டார் என்று யார் சொன்னார் என்றால் சீட்டு போட்ட மற்ற நபர்கள் சொன்னார்கள். நான் சொல்வது போல் 1ம் எதிரி எவ்வித சீட்டு பணமும் நடத்தி இருப்பது கிடையாது என்றாலும் அவரிடம் நானோ, நான் சொல்லும் நபர்களோ எவ்வித சீட்டு பணமும் செலுத்தி இருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல. சீட்டு நடத்தாமல் எதிரி ஊரை விட்டு ஓடி விட்டதாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. கிருஷ்ணன் கொடுத்தாக சொல்லும் புகார் மகேஷ் மாயவன் சொல்லி கொடுக்கப்பட்டபுகார் என்றால் சரிதான்.

மகேஷ் மாயவன் ஏற்பட்டின் பேரில் எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு அவர்கள் கேட்டு கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மகேஷ் மாயவன் அரசியல் கட்சியில் ஒன்றைய செயலாளராக இருந்துள்ளார் என்றால் சரிதான் தற்போது vice chairman ஆக

இருக்கிறார் என்றால் சரிதான். மாயவன் கோவில் சீட்டு பணத்திற்கும், எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ரூ.60000 சீட்டிற்கு வாரம் எவ்வுளவு கட்டினேன் என்றால் கழிவு போக ரூ.2000 கட்டினேன். ஒவ்வொரு ஏலத்திலும் கழிவு போக தான் சீட்டு பணம் கட்டினேன் என்றால் சரிதான். ஏலக்கழிவு 4சீட்டிற்கும் பொருந்தும் என்றால் சரிதான். ஏலம் கேட்டு ஏலம் எடுப்பவர்கள் கழிவு இல்லாமல் முழு தொகையும் கட்ட வேண்டும் என்றால் சரிதான். ஏலம் எடுத்தவர்கள் முழு தொகை எவ்வுளவு கட்ட வேண்டும் என்றால் 1சீட்டிற்கு ரூ.600 கட்ட வேண்டும நான் எத்தனை சீட்டுகள் எடுத்துள்ளேன் என்றால் எடுக்கவில்லை. ஒவ்வொரு வாரமும் ஏலத்தில் கலந்து கொள்வேன் என்றால சரிதான். ஏலம் எடுத்த நபரே அடுத்த வாரமும் மற்றொரு சீட்டிற்கு ஏலம் எடுக்கலாமா என்றால் எடுக்கலாம். ஏலம் கேட்ட நபருக்கு கோவிலில் வைத்து ஏலத்தொகையை கொடுத்து விடுவார்கள் என்றால் சரிதான். ஏற்கனவே ஏலம் எடுத்தவர்களும், சீட்டு பணத்தை கட்டவில்லை என்றால் சரிதான். மகேஷ் மாயவன் ஆளுங்கட்சியின் ஒன்றிய செயலாளர் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளது போல் வழக்கிற்கும், இரண்டாவது எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் 2வது எதிரியோ, அவருக்கு வேண்டபட்டவர்கள் யாருமோ தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தவில்லை என்றாலும் சரியல்ல. (மேலும் 1வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையையும், 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்வதாக 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞரால் கூறப்பட்டது.)

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

***

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 34 |
| NAME | : | வசுமதி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 01.07.2025

முதல் விசாரணை

நான் தற்போது வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடிசுத்தும் தொழில் செய்து வருகிறேன். எதிரிகள் மாயவன் மற்றும் மாயவநாதன் ஆகியோர்களை எனக்கு தெரியும். அசா.1 கிருஷ்ணன் அசா.2 அந்தோணிராஜ் அசா.3 டேவிட் அமல்ராஜ் அசா.4 செல்வராஜ் . அசா.5 ஜோசப்ராஜ் அசா.6 அருமைகிளி அசா.7 பாலமுருகன் அசா,8 செல்வராணி அசா.9 பூங்கொடி சூசை அசா.10 சீதாலெட்சுமி அசா.11 ராமலெட்சுமி அசா.12 பொன்பாண்டி, அசா.13 சாந்தி அசா.14 குணசீலன், அசா.15 முத்துலெட்சுமி அசா.16 செல்வகுமாரி அசா.17 முருகன், அசா.18 சரோஜா, அசா.19 குமரேசன், அசா.20 மணிராஜ், அசா.21 பொன் சேகர், அசா.22 சுதா, அசா.23 ரவிகுமார், அசா.24 ஜெயஜோதி, அசா.25 ஜானகி, அசா.26 பவளக்கொடி அசா.27 தெய்வகனி தெரியும். அசா.28 செல்வன் அசா.29 குற்றாலராமசுந்தரம் மகன் மாயவன் அசா.30 அருள்ஜெலஸ்டீன், அசா.31 அன்னபூரணி, அசா.32 ஜோசப் அந்தோணி ராஜ், அசா.33 முத்துக்கனி ஆகியோரை தெரியும். எல்லோரும் சீட்டு கட்ட

வருவார்கள். 2010ம் வருடத்திலிருந்து சீட்டு போட்டேன். ஆஜர் எதிரிகள் மொத்தம் 7 சீட்டு நடத்தினார்கள். ரூ.33000 சீட்டு நான் போட்டிருந்தேன். 51 வாரம் சீட்டு கட்டி உள்ளேன். மொத்தம் ரூ.16000 கட்டி இருந்தேன். சீட்டு பணத்தை மாயவன் கோவிலில் வைத்து ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சீட்டு பணத்தை கட்டுவேன். சீட்டு பணத்தை வாங்கி பெயர் எழுதி கையெழுத்து வாங்கி வைத்து கொள்வார்கள்.

பின்னர் சீட்டு பணத்தை எதிரிகள் கொண்டு சென்று விட்டார்கள். 2010ம் வருடம் எதிரிகள் வந்ததாக பக்கத்தில் உள்ளவர்கள்சொல்லி தெரியும். பக்கத்தில் உள்ளவர்கள் போய் கேட்டார்கள். சீட்டு பணத்தை தந்துவிடுவார்கள் என நம்பிக்கையாக சீட்டு போட்டோம். சீட்டு பணத்தை தற்போது வரை தரவில்லை. நடவடிக்கை எடுக்க யார் சென்றார்கள் என்ற விவரம் தெரியவில்லை. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் கோவிலின் வரிதாரர் கிடையாது என்றால் சரிதான். மாயவன் கோவிலில் யாரு நிர்வாகம் செய்து வருகிறார் என்ற விவரம் எனக்கு தெரியாது. பூங்கொடி சூசை ஆணா, பெண்ணா என்றால் தெரியாது. பூங்கொடி சூசைக்கு எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக யார் புகார் கொடுத்தார் என்ற விவரமும் எனக்கு தெரியாது. என்னை போலிஸார் எப்போது விசாரித்தார்கள் என்றால் கடையத்தில் வைத்து விசாரித்தார்கள். கடையத்தில் எங்கு விசாரித்தார்கள் என்றால் இடம் தெரியாது. என்னை விசாரித்தது ஆண் காவலர். என்னை விசாரிக்கும் போது முதல்விசாரணையில் சொன்ன விவரத்தை தான் சொன்னேனா என்றால் ஆமாம் போலிஸார் என்னை விசாரிக்கும் போது சீட்டு போட்ட எங்கள் ஊர் பக்கத்தில் உள்ள அனைவரும் இருந்தார்கள். நான் காவல்நிலையத்தில் ஏதேனும் கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. மாயவன் கோவிலை இரண்டு தரப்பு நபர்கள் நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். மாயவன் அரசு பள்ளியில் வேலை பார்த்த ஆசிரியர் என்றால் சரிதான். அவரும் அந்த கோவிலின் வரிதாரர் என்றால் சரிதான். அவரது தலைமையில் ஒரு தரப்பினரும், மகேஷ் மாயவன் தலைமையில் மற்றொரு தரப்பினரும் என இரு தரப்பினராக இருந்து கோவிலை நிர்வாகம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

மகேஷ் மாயவன் சீட்டு நடத்தி வருகிறார் என்றால் சரிதான். 2வது சீட்டு பணம் கோவிலுக்கு சென்றுவிடும். சீட்டு பணத்தில் கலந்து கொண்டு ஏலத்தில் எடுப்பவர்கள் வாங்கி செல்வார்கள் என்றால் சரிதான். போலிஸார் என்னை விசாரிக்கும் போது ரூ.33000 சீட்டின் 51 வாரம் சீட்டு பணம் செலுத்தியதாக பேப்பரில் எழுதி கொடுத்தேனா என்றால்

எழுதி கொடுத்தேன். முதல் விசாரணையில் நான் சொல்லிஉள்ள 33 நபர்களும் எவ்வுளவு சீட்டு போட்டார்கள். எவ்வுளவு பணம் கட்டி உள்ளார்கள் என்று போலிஸாரிடம் எழுதி கொடுத்துள்ளார்களா என்றால் எழுதி கொடுத்துள்ளார்கள். 1ம் எதிரி மாயவனுக்கும், மகேஷ் மாயவனுக்கும் கோவிலை நிர்வாகம் செய்வது சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி எவ்வித சீட்டும் நடத்தவில்லை என்றால் சரியல்ல. மகேஷ் மாயவன் என்பவருக்கும், இந்த 1ம் எதிரிக்கும் மாயவன் கோவிலை நிர்வாகம் செய்வது சம்பந்தமாக பிரச்சினை இருந்து வருவதாலும் 1ம் எதிரி அரசு ஆசிரியர் பணி செய்வதால் அவரை மிரட்டி பணிய வைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் மகேஷ் மாயவன் தூண்டுதலின் பேரில் கொடுக்கப்பட்ட புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>2வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

ரூ.33000 சீட்டிற்கு வாரம் எவ்வுளவு கட்ட வேண்டும் என்றால் ரூ.500 கட்ட வேண்டும். நான் 51 வாரம் கட்டி உள்ளேன். ரூ.33000 சீட்டு 2010ல் ஆரம்பித்தது. நான் முதல் விசாரணையில் சொல்வது போல் இந்த வழக்கிற்கும் 2ம் எதிரிக்கும் எந்த சம்பந்தமும்இல்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரியோ, அவருக்கு வேண்டப்பட்டவர் யாரோ தனிப்பட்ட முறையில் சீட்டு நடத்தப்படவில்லை என்றாலும் சரியல்ல. (மேலும் 1வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையையும், 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்வதாக 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞரால் கூறப்பட்டது.)

மறுவிசாரணை இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi